**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனி - 2020**

-----------------------------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி தனியார் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை எனும் பந்தியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருண்மையான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ள என்னால் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளடங்களாக பொருண்மையான உருப்படிகளை மாற்று வழிகளின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது சான்றுறுதிப்படுத்த என்னால் முடியாதிருந்தது. இதன் காரணமாக நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவை உள்ளடக்கும் பெறுமதிகள் மற்றும் உருப்படிகளின் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் சீராக்கல்களை மேற்கொள்ளல் அவசியமானதா என்பதை என்னால் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமான செலவின மீதிகள் ஈடுசெய்யப்பட முடியாத போதிலும், 2011 ஆம் ஆண்டின் போது செவனகல சுகர் இன்டஸ்டிரீஸ் தனியார் கம்பனி அரசாங்கத்திற்கு சுவீகரிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் கணினிக் கட்டமைப்பில் நிலவிய குறைபாட்டின் காரணமாக எழுதுகருவிகள், உரம் | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | உரிய இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றின் இருப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 300,186,439 ஆன செலவின மீதிகளின் ரூபா 412,530,957 ஆன மொத்த இருப்பின் பெறுமதிக்கு ஈடு செய்யப்பட்டு இருப்பு பெறுமதி ரூபா 112,344,518 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 66(இ) ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு காலப்பகுதியின் இறுதி முதல் 12 மாத காலப்பகுதியினுள் அறவிடப்படும் சொத்துக்கள் மாத்திரம் நடைமுறைச் சொத்துக்களாக அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், செவனகல பிரிவின் பதவியணியில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் அறவிடப்படும் ரூபா 22,473,699 ஆன கடன் தொகையும் பெல்வத்த பிரிவிலிருந்து 2024 ஏப்ரல் 22 ஆந் திகதி முதிர்வடையும் ரூபா 43,544,918 ஆன நிலையான வைப்பொன்றும் செவனகல பிரிவில் 2022 நவம்பர் 28 ஆந் திகதி முதிர்வடையும் ரூபா 45,000,000 பெறுமதியான 02 நிலையான வைப்புக்கள் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் கணக்கீட்டு அறிக்கைகளின் மூலம் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் இறுதியிலிருந்து 12 மாதங்களினுள் முதிர்வடையும் சொத்துக்கள் மாத்திரம் அறிக்கையிடப்பட வேண்டும். |
| (இ) | இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 07 ஆம் பந்திக்கமைய 03 மாதங்கள் அல்லது அதனைவிட குறைவான காலத்தில் முதிர்வடையும் ரூபா 522,603,571 பெறுமதியான செவனகல பிரிவின் 13 நிலையான வைப்புக்கள் மற்றும் பெல்வத்த பிரிவின் ரூபா 396,749,217 பெறுமதியான 4 நிலையான வைப்புக்கள் காசு மற்றும் காசுக்கு சமனானவையாக வகைப்படுத்தப்பட்டு காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தின் கணக்கு அறிக்கைகளில் அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் காசுப்பாய்ச்சல்கள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையற்ற சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாத காரணத்தால் | 2011 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தை அரசிற்கு சுவீகரிக்கும் சந்தர்ப்பத்தில் முழுமையாக தேய்விடப்பட்டு நிறைவு | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையற்ற |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதியளவில் முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்டிருந்த பெல்வத்த பிரிவின் ரூபா 243,940,222 மற்றும் செவனகல பிரிவின் ரூபா 1,065,219,304 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு காணப்பட்டதுடன், அந்த மதிப்பீட்டு வழுவானது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம், மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யப்பட்ட சொத்துக்களும் நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்பட்டதுடன், எதிர்காலத்தில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்களின் பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்வதற்கும், நியம இலக்கம் 08 இன் பிரகாரம், மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கொண்டு செல்லும் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கம்பனியின் பெல்வத்த பிரிவினால் ஊழியர்கள் மற்றும் வெளிவாரி தரப்பினருக்கு எதிராக 04 வழக்குகளும், செவனகல பிரிவினால் ஊழியர்கள் மற்றும் வெளிவாரி தரப்பினருக்கு எதிராக 20 வழக்குகளும் தொடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டவாறு காணப்பட்டதுடன், வெளிவாரி தரப்பினர் மற்றும் ஊழியர்களால் முறையற்ற விதத்தில் சேவையை முடிவுறுத்தல் மீண்டும் சேவையை கோருதல், சேவை நீடிப்பொன்றினை கோருதல், தர உயர்வுகளை பெற்றுக்கொள்ளல், கம்பனியை அரசாங்கத்திற்கு சுவீகரித்தமையால் எத்தனோலை பெற்றுக்கொள்ள முடியாமை போன்றவற்றை கோரி கம்பனியின் பெல்வத்த பிரிவிற்கு எதிராக 02 வழக்குகளும், செவனகல பிரிவிற்கு எதிராக 08 வழக்குகளும் தொடுக்கப்பட்டு விசாரிக்கப்பட்டவாறு காணப்பட்டது. இலங்கை கணக்கீட்டு நியம இலக்க 37 இன் 84, 85 மற்றும் 86 ஆம் பந்திகளுக்கமைய அந்த வழக்குகளின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு நிதிக்கூற்றுக்களில் நிகழத்தக்க பொறுப்புகளுக்காக நிதியேற்பாடுகளை ஒதுக்குவதற்கு அல்லது வழக்கு தொடர்பான விபரங்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமையால், வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பமொன்று காணப்படவில்லை. 2021 ஆம் ஆண்டின் கணக்கு அறிக்கைகளில் அது திருத்தப்படும் என்பது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் விதிகளுக்கமைய நிகழத்தக்க பொறுப்புகளுக்காக நிதியேற்பாடு மேற்கொள்வதற்கு அல்லது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகளுடனான இணக்கமின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 117 ஆம் பிரிவுகளுக்கமைய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது, பயன்படுத்தப்படும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளில் முறையே ரூபா 1,261,910,806 மற்றும் ரூபா 266,462,262 தொகையான விவசாயக் கடன்களுக்காக முறையே ரூபா 530,481,173 மற்றும் ரூபா 9,242,963 தொகையான ஐயக்கடன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், கந்தளாய் சீனிக் கம்பனியிலிருந்து பெற வேண்டிய ரூபா 6,002,360 தொகை மற்றும் சிறிய அளவிலான கரும்பு பயிர்ச்செய்யும் செயற்திட்டத்தில் (SSP) பெற வேண்டிய ரூபா 6,665,725 ொதகை 2014 ஆம் ஆண்டு முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது அந்த தொகையும் ஐயக்கடனாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த ஒதுக்கங்களுக்கு காரணடா கஅமைந்த விடயங்கள் மற்றும் உரிய கணக்கீட்டு கொள்கைகளும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஐயக்கடன் ஒதுக்கீட்டு கொள்கையை எதிர்வரும் கணக்கு அறிக்கைகளின் ஊடாக வெளிப்படுத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஐயக்கடன் ஒதுக்கீட்டு கொள்கையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பதிவழிக்கப்பட்ட செவனகல பரிவின் ரூபா 80,086,509 கூட்டுத்தொகையான பொருளாதார சேவைக் கட்டணத்தின் பெறுமதி தவறுதலாக காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது செலுத்திய பொருளாதார சேவைக் வரிப் பெறுமதியான ரூபா 6,691,840 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | காசுப்பாய்ச்சல்கள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 இன் 43 ஆம் இலக்க குறைச் செயல்பாடுடைய முயற்சிகள் அல்லது குறைப்பயன்பாடுடைய சொத்துக்களை புனரமைக்கும் அதிகாரச்சட்டத்தின் | இந்த காணிகளின் உரித்தானது இதுவரையிலும் லங்கா சீனி கம்பனி – செவனகலவிற்கு | கம்பனிக்குரிய காணிகள் அல்லது கட்டிடங்களின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கும், |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் 2013 ஆம் ஆண்டின் போது செவனகல சுகர் இன்டஸ்டிரீஸ் (தனியார்) கம்பனிக்குரிய அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளும் இலங்கை சீனிக் கம்பனிக்கு சுவீகரிக்கப்பட வேண்டிய போதிலும், செவனகல பிரிவிற்குரிய சுமார் 469.1674 ஹெக்டேயர்கள் பரப்பளவான காணிகளை சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கிடைக்கவில்லை. அதற்கான சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. | அவற்றை பதிவேட்டிற்கு உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செவனகல பிரிவில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக காணப்பட்ட ஏனைய இருப்புகள் பௌதீக ரீதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள உண்மையான இருப்புகளின் பெறுமதிக்கு பதிலாக இருப்பு பேரேட்டின் பிரகாரம் பெறுமதியான ரூபா 524,970,955 தொகை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 35 வருடங்களுக்கு முன்னர் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது முதல் தொழிற்சாலைகளை நிறுவிய இந்தியக் கம்பனியால் நிறுவனத்திற்கு கொடையாக வழங்கப்பட்ட உருப்படிகள் பௌதீக இருப்பினுள் உள்ளடக்கப்பட்டமை மற்றும் அவற்றின் பெறுமதிகளை கணிப்பீடு செய்வதில் சிக்கல்கள் நிலவுகின்றமை மற்றும் கம்பனியை அரசாங்கத்திற்கு சுவீகரிக்கும் போது சில உருப்படிகளின் தேறிய பெறுமதிகள் இனங்காணப்பட்டிராத காரணத்தால் மற்றும் சட்ட உரித்தானது முன்னரே அரசாங்கத்திடம் காணப்படாத காரணத்தால் தொடர்ச்சியாக அந்த இருப்பு பௌதீக இருப்பினுள் உள்ளடக்கப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க முடியாதிருந்தமை. | பௌதீக மெய்மையாய்வ அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள இருப்பு மீதியை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | செவனகல பிரிவின் இருப்பு மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள நலன்புரி விலைக்கு வழங்குவதற்கான ரூபா 6,108,000 பெறுமதியான 55,528 கிலோ கிராம்கள் சீனி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிராததுடன், நிதிக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 35,365,825 எத்தனோல் இருப்பு பௌதீக மெய்மையாய்வுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அனைத்து இருப்பும் பௌதீக மெய்மையாய்வுக்கு உட்படுத்தப்பட்டு நிதிககூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 ஆம் ஆண்டின் பௌதீக இருப்பு மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் களஞ்சியங்களில் ரூபா 785,662 பெறுமதியான 207 இருப்பு உருப்படிகளின் பற்றாக்குறையொன்று மற்றும் ரூபா 506,199 பெறுமதியான 150 இருப்பு உருப்படிகயின் மிகையொன்று காணப்பட்டதுடன், பௌதீக மெய்மையாய்வுக்கு உட்படுத்தப்பட்ட, எனினும் பெறுமதி கணிப்பிட முடியாத 1250 இருப்பு வகைகளும், பயன்படுத்த முடியாத மற்றும் கைத்தவிர்க்கப்பட வேண்டிய ரூபா 2,888,359 பெறுமதியான 250 இருப்பு உருப்படிகளும் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன், கணக்குகளில் அது தொடர்பில் சீராக்கம் மேற்கொள்ளப்படவில்லை. | இந்த இருப்பு மீதிகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், நிலவும் சட்ட வரையறைகள் இதற்க காரணமாக அமைந்துள்ளமை. | இருப்பு தொடர்பில் உரிய உள்ளகக் கட்டுப்பாட்டினை பேணி, பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், பௌதீக மெய்மையாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதிகளை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கும், நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | செவனகல பிரிவின் நிதிக்கூற்றுக்களில் எழுதுகருவிகள், உரம் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றின் இருப்பினுள் ரூபா 9,475,416 பெறுமதியான “Transit Fixed Assets” பெயருடைய மீதியொன்று 2013 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்படுவதுடன், இது தொடர்பில் கடந்த வருடங்களிலும் கணக்காய்வினால் விடயங்கள் சுட்டிக்காண்பிக்கப்பட்ட போதிலும், அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களினுள் அந்த பெறுமதி அவ்வாறே நிலவியது. | ERP கட்டமைப்பினை நிறுவி, தற்போது அதன் ஆரம்ப நடவடிக்கைகள் நிறுவனத்தினுள் இடம்பெற்றவாறு உள்ளது. தற்போது பயன்படுத்தப்படும் “கணக்கீட்டு மென்பொருள் கட்டமைப்பு” இனுள் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இயலும் என்பது. | சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்படுகின்றமையால் முழுமையான விசாரணை மேற்கொண்டு சரியான தீர்மானம் எடுக்க வேண்டும். |
| (எ) | செவனகல பிரிவின் நடைமுறை வேலையின் பெறுமதியான ரூபா 41,273,467 ஆக நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் தனியானதொரு உருப்படியாக காண்பிப்பதற்கு பதிலாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் பெறுமதியில் சேர்க்கப்பட்டு ஒவ்வொரு உருப்படியாக நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நடைமுறை வேலையானது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் தனியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | பெல்வத்த பிரிவின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 38,764,870 தொகையான வழியிலுள்ள இருப்பினுள் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வழியில் காணப்படும் ரூபா 4,904,160 தொகையான இருப்பு | 2014 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து நிலவும் இந்த இருப்பு, பொருட்களின் கிரயம் குறைவான கணக்கிடப்பட்டமையால் ஏற்பட்ட கணக்கீட்டு | இந்த பொருட்கள் பெறப்பட்டதா என்பதை கண்டறிய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடங்கியிருந்த போதிலும், இந்த இருப்பு தொடர்பான சரியான தகவல்கள் இனங்காணப்பட்டு கணக்குகளில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த அவதானிப்பு கடந்த வருடங்களிலும் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட போதிலும், அது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | வழுவாகும், மேலும் இது குறித்து மேலும் ஆராயப்பட்டு எதிர்காலத்தில் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஐ) | பெல்வத்த பிரிவின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 3,779,454,934 கூட்டுப் பெறுமதியுடைய துறைக்குரிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் (குத்தகைச் சொத்துக்களும் உள்ளடங்களாக), நீர்ப்பாசன மற்றும் பல்வேறு உபகரணங்கள் மற்றும் தொழில்சாலை மின்கூடம் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு வீதம் முறையே 15, 6 மற்றும் 5 ஆக காணப்பட்டதுடன், உட்கட்டமைப்பு வசதிகள் (Infrastructure) ஆகியவற்றுக்கு பெறுமானத்தேய்வு வீதம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், அந்த சொத்துக்களில் உள்ளடங்கியுள்ள ரூபா 1,672,452,689 கூட்டுத்தொகையான கிரயமுடைய சொத்துக்கள் 2 சதவீதம் முதல் 50 சதவீதத்திற்கு இடைப்பட்ட பல்வேறு வீதங்களின் கீழ் பெறுமானத்தேய்விடப்படுகின்றமையால் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ஆகியவற்றின் சரியானதன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. | 2011 ஆம் ஆண்டில், நிறுவனம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டபோது இருந்த சொத்துக்கள் நிலையான சொத்து பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நடைமுறையில் உள்ள பெறுமானத்தேய்வு விகிதத்தின்படி தேய்மான விகிதங்களில் வேறுபாடு இருந்தது. கணக்கீட்டு முறையின் மூலம் தொடர்புடைய சதவீதங்களை மாற்ற முடியாது என்பதால், எதிர்காலத்தில் சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுடன் நிறுவனத்தின் பெறுமானத்தேய்வுக் கொள்கையை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய சொத்துக்களுக்கு குறிப்பிட்ட தேய்மான விகிதங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும் மற்றும் தேய்மானக் கொள்கையின்படி பெறுமானத்தேய்வு கணக்கிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | 2014 யூன் 30 ஆந் திகதி ரூபா 42,529,510 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட 2018 யூலை 07 ஆந் திகதி தீக்கிரையாகியிருந்த பெல்வத்த பிரவின் சீனி கட்டிகளை உருவாக்கும் "Modification Automation Factory Plant" இயந்திரத்திற்காக காப்புறுதி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து கோரப்பட்ட ரூபா 40,430,655 தொகையான நட்டஈட்டுத் தொகையில் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 12,653,693 மாத்திரம் கிடைத்திருந்ததுடன், அந்த தொகையில் இயந்திரத்தினை பழுதுபார்க்காது நிதி நிலைமைக் கூற்றில் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளாக 2020 ஆம் ஆண்டின் போது காண்பிக்கப்பட்டிருந்ததுடன், தீ நட்டம் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களுக்காக ரூபா 40,430,655 ஆன நட்டஈட்டுத் தொகை கோரப்பட்ட போதிலும், மென்பொருளுக்காக நட்டஈடு நிராகரிக்கப்பட்டதாகவும், 2021 ஆம் ஆண்டினுள் இயந்திரத்தின் பழுதுபார்த்தல் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், புதிய சொத்துக்களை நிறுவுதல் தொடர்பான சீராக்கங்கள் மற்றும் வெளிப்படுத்தல்கள் 2021 ஆம் ஆண்டின் போதுமேற்கொள்ளப்படும். மென்பொருட்களில் நிலவிய குறைபாடு காரணமாக இயந்திரத்தினை பெறுமானத்தேய்வினை நிறுத்த முடியாதிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போது திருத்தப்படும் என்பது. | இயந்திரத்தினை பெறுமானத்தேய்வினை நிறுத்தி அதனை கைத்தவிர்ப்பதற்க அல்லது பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | செவனகல பிரிவின் உத்தியோகபூர்வ இல்லமானது அரசியல்வாதியொருவர், ஓய்வுபெற்ற இரு உத்தியோகத்தர்கள், தனியார் நிறுவனமொன்றின் முகாமையாளரொருவர், 3 அரச உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 7 பேரால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும், உத்தியோகபூர்வ இல்லங்களிலிருந்து அவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக வீட்டு வாடகை, நீர் மற்றும் மின்சார செலவினம் ஆகியவற்றுக்காக அந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 1,072,323 இனை அறவிடுவதற்கு அல்லது பெற வேண்டிய பணமாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிய குடியிருப்பாளர்களாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இல்லங்களில் தங்கியுள்ளதுடன், சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | மின்சாரம் மற்றும் குடிநீர் கட்டணத்தை அலுவலரே ஏற்க வேண்டும், செலுத்திய கட்டணத்தை வசூலிக்க நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | கம்பனியின் நிதிக்கூற்றுக்களுக்கமைய பெல்வத்த பிரிவின் பதிவு இலக்கத்துடனான வாகனங்கள் மற்றும் களத்தில் பயன்படுத்தப்படும் 368 இயந்திர உபகரணங்களின் பெறுமதியானது ரூபா 379,858,648 ஆக காணப்பட்ட போதிலும், | 2011 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தினை அரசாங்கத்திற்க சுவீகரித்த சந்தர்ப்பத்தில் கம்பனியின் நிதிககூற்றுக்களில் நிலவிய இயந்திர உபகரணங்கள் | அனைத்து வாகனங்களும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போக்குவரத்துப் பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கமைய ரூபா 439,472,361 பெறுமதியான வாகனங்கள் மற்றும் துறையில் பயன்படுத்தப்படும் 491 வகையான இயந்திர உபகரணங்கள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய ரூபா 59,613,713 பெறுமதியான வாகனங்கள் மற்றும் துறையில் பயன்படுத்தப்படும் 123 இயந்திர உபகரணங்கள் குறைத்து கணக்கு வைக்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | அவ்விதத்திலேயே கணக்கு அறிக்கைகளில் நிலவிய போதிலும், இந்த வாகனங்கள் இது வரையிலும் பௌதீக ரீதியாக மெய்மையாய்வுக்கு உட்கடுத்தப்பட்டு, கணக்கு அறிக்கைகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், நிறுவனத்தினால் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் கணக்கு அறிக்கைகளில் காணப்படுவதுடன், சுவீகரிக்கப்பட்ட பழைய வாகனங்களில் இந்த வேறுபாடு நிலவுகின்றது. நிறுவனத்தின் சொத்துக்களின் மெய்மையாய்வொன்ற தற்போது இடம்பெறுவதுடன் அது நிறைவடைந்த பின்னர் கணக்கு அறிக்கைகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (க) | செவனகல பிரிவினால் ரூபா 27,067,812 பெறுமதியான இயந்திர உபகரணங்களை கொள்வனவு செய்து 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டின் போது நிறுத்தப்பட்டிருந்த ''கழிவுநீர் சுத்திகரிப்பு செயற்திட்டம்'' மற்றும் ரூபா 2,864,444 ஆன செலவினத்தில் 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டு பயன்படுத்தப்படாத ''குழாய் கிணறு செயற்திட்டம்'' ஆகியன தோல்வியடைந்திருந்ததுடன், செலவிடப்பட்ட தொகை பல வருடங்களாக நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக, கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டத்தின் பணிகள் நிறைவடையவில்லை என்பதும், ஆராய்ச்சி நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்ட குழாய் கிணறு அமைப்பது தொடர்பான புலனாய்வு நிறைவடைந்த பின்னர் ''நடைமுறை வேலை கணக்கு'' தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்த அமைப்புகளின் தோல்விக்கான காரணங்களைக் கண்டறிந்து, அதை செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் அல்லது யாரேனும் அலட்சியமாக இருந்தால், அதற்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கா) | பெல்வத்த பிரிவின் ''கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டுச் சேவைகள் கணக்கு'' மற்றும் ''கடன் பட்டோர் வழங்கல் கணக்கு'' என பேணிச் செல்லப்பட்டிருந்த இரு கணக்குகளின் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான முறையே ரூபா 39,971,385 மற்றும் ரூபா | இந்த சேவை வழங்குநர்களிடமிருந்து மீண்டும் சேவைகளைப் பெறும்போது பழைய கடன் பாக்கிகள் செலுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும் அந்த | இந்தக் கடன் கொடுத்தோர் மீதிகள் உண்மையாக காணப்படுகின்றனவா என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 4,691,459 ஆன மீதிகள் 2002 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரியதாக தீர்ப்பனவு செய்யப்படாது காணப்பட்டது. இந்த சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல் கணக்கீட்டு முறைமையின் பிரச்சினைகள் மற்றும் ஏனைய காரணங்களால் உருவாகியிருந்த போதிலும் அதனை தீர்ப்பதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பதிவழிக்கப்படாது, முன்கொண்டுவரப்பட்டுள்ளது டன், இதனை உறுதிசெய்த பிறகு, பணிப்பாளரின் அனுமதியைப் பெற்ற பிறகு, அது கணக்கு அறிக்கைகளிலிருந்து நீக்கப்படும் என்பது. | |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செவனகலப் பிரிவின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 11 பேரேட்டுக் கணக்குகளின் கீழ் விவசாயிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய மொத்த கடன் தொகை ரூபா 266,462,262 ஆன போதிலும், அதற்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விவசாய கடன் பட்டோலையில் மற்றும் காலப் பகுப்பாய்வில் அந்த பெறுமதிகள் முறையே ரூபா 263,857,771 மற்றும் ரூபா 264,072,243 ஆகும். அதற்கமைய நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிடும் போது விவசாய கடன் பட்டோலையில் மற்றும் காலப் பகுப்பாய்வு அறிக்கையில் முறையே ரூபா 2,604,491 மற்றும் ரூபா 2,390,019 ஆன வேறுபாடுகள் நிலவின. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டிய கடன் நிலுவைகள் சரியானவை என்றும், கரும்பு விவசாய கடன், கடன் ஆவணங்கள் மற்றும் ஏற்கனவே உள்ள வெறுபாடுகள் தொடர்ந்தும் பரீட்சிக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | விவசாயிகளின் கடன் நிலுவைகளை நிதிக்கூற்றுக்களில் துல்லியமாக சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.5.5 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான செவனகலப் பிரிவிற்குரிய ரூபா 29,416,348 தொகையான வியாபார கடன்கொடுத்தோர் கணக்குகள் 97 இற்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் வியாபார கடன் கொடுத்தோரின் மீதியை உறுதிப்படுத்தி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பெல்வத்தப் பிரிவின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உற்பத்தி செய்யப்பட்ட சீனியின் அடிப்படையில் செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) | 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுததிக்குரிய கணக்கு பதிவேடுகளில் தேசத்தை கட்டியெழுப்பும் | நிதிக்கூற்றுக்களில் காணப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் முன்வைக்கப்பட |

| | | |
|---|---|---|
| ரூபா 109,138,256 இனுள் 2012-2016 காலப்பகுதிக்குரிய செலுத்த வேண்டிய ரூபா 92,125,804 ஆன வரித்தொகையொன்று (NBT) காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறான போதிலும், இந்த செலுத்த வேண்டிய வரி தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வரி அறிக்கைகள் அனுப்பப்பட்டிராத காரணத்தால் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள இந்த வரித் தொகையின் சரியானதன்மையை கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது. | வரியாக ரூபா.92,125,804 செலுத்த வேண்டியுள்ளது. மேலும், 2019 அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களுக்குரிய ரூபா.17,012,452 தொகை செலுத்த வேண்டியதாக உள்ளதுடன, அதன்படி 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா.109,138,256 ஆன தொகை செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்ப வரியாக கணக்கு அறிக்கைகளில் காணப்பட்டமை. | வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செவனகல பிரிவின் ரூபா 5,062,695 ஆன முற்பணங்கள் மற்றும் முற்கொடுப்பனவுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 421,910 தொகை 01 முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருடத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பில் உடனடியாக விசாரித்து தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கொள்முதல் தொடர்பான ஒரு முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை நிறுவ வேண்டும். |
| (ஆ) | 2012-2020 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியினுள் கம்பனியின் உள்ளகப் பிரிவான கொழும்பு தலைமை அலுவலகத்தில் மற்றும் பெவ்வத்த பிரிவிலிருந்து செவனகல பிரிவிற்கு அறவிடப்பட வேண்டிய தொகையை தீர்ப்பனவு செய்யாது முறையே ரூபா 110,497,848 மற்றும் ரூபா 851,530,055 தொகையானது செவனகல பிரிவின் கணக்குகளில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் தொடர்புடைய தரப்பினராக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடத்தில் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தொடர்படைய அரச மற்றும் தனியார் கம்பனிகயில் மற்றம் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி கம்பனியில் அந்தந்த பிரிவுகளிடையே இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்களில் பெற வேண்டிய மற்றம் செலுத்த வேண்டிய மீதிகள் விரிவாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | பொருட்கள் மற்றும் உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக செவனகலப் பிரிவினால் வழங்குநருக்கு வழங்கப்பட்ட | இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தி, முற்பணங்களை | தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பில் ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கு, |

| | | |
|---|---|---|
| ரூபா 8,233,150 ஆன முற்பணத்திற்காக 4 முதல் 8 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. அந்த தீர்க்கப்படாத முற்பண மீதியினுள் 21 சந்தர்ப்பங்களில் பொருட்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 509,808 தொகையானது பொருட்களை விடுவிக்கும் கட்டணங்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் காப்புறுதிக் கட்டணங்களும் உள்ளடங்கியிருந்தது. | தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கொள்வனவுகள் தொடர்பில் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செவனகல பிரிவின் கணக்குகளில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வியாபார கடன் கொடுத்தோர் ரூபா 5,492,069 தொகையானது 02 முதல் 07 வருடங்கள் வரையான காலமாகவும், நானாவித கடன் கொடுத்தோர் ரூபா 1,055,351 தொகை 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும், கரும்பு விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய ரூபா 61,322,678 தொகை 8 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்காது கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டவாறு காணப்பட்டது. | 2011 ஆம் ஆண்டு செவனகல அரசால் பொறுப்பேற்ற பின்னர் கரும்பு விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக 2011ஆம் ஆண்டு கரும்பு வழங்குவதற்காக கரும்பு விவசாயிகளுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் கணிப்பிட நேர்ந்ததுடன், 2011 ஆம் ஆண்டின் போது அந்த கணிப்பீட்டின் போது கரும்பு விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 59,792,499 ஆன கடன் தொகையை அறவிட்டு எஞ்சிய தொகை செலுத்தப்பட்டுள்ளதாக, அந்த மீதிகளை அறவீடு செய்ததல் தனியார் நிர்வாக காலப்பகுதிக்கு உரியது என்பதுடன், இந்த செலுத்த வேண்டிய மீதிகள் செவனகல நிறுவனத்திற்கு எதிரான | தாமதிக்காது தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் பெறுதல் மற்றும் கொடுப்பனவுகளின் அடிப்படையில் தீர்ப்பனவு செய்யும் இயலுமை காணப்படுகின்றமை மற்றும் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தால் செலுத்த வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்ட தொகையான ரூபா 1,500,179 இதுவரை செலுத்தப்பட்டுள்ளது என்பது.

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 (அ) பிரிவினால் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அமைச்சரால் 2008 சனவரி 25 ஆந் திகதி 1533/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட கட்டளையின் 1 ஆம் பிரிவின் 30 ஆம் கட்டளை | சீனி உற்பத்தி அல்லது சீனியை சுத்திகரித்தல் தொடர்பில் பெல்வத்த மற்றும் செவனகல தொழிற்சாலைகளுக்காக அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் சீனி தொழிற்சாலை மற்றும் வடிசாலைக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சீனி தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் பேகஸ் சுற்றாடலுக்கு சேராது, அவற்றை சேகரித்து அகற்றும் தொழில்நுட்ப நடைமுறையொன்று நிறுவப்பட்டதுடன், வடிசாலையை அண்மித்ததாக சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டமொன்று 2022 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ள முடியும் என்பது. | சுற்றாடல் பாதுகாப்பு நடைமுறையொன்ழற தாபித்து அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| (I) | II ஆம் அத்தியாயத்தின் 9.1 ஆம் பந்தி | அரசாங்க சேவையில் இருந்து ஓய்வு பெற்ற ஒருவரை மீண்டும் அரச சேவையின் பதவியொன்றில் அமர்த்துவதற்கு அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றில் சேவையில் அமர்த்துவதற்கு அமைச்சரவையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற போதிலும், உரிய அனுமதி பெறாமல் உள்ளக கணக்காய்வு ஆலோசகர், தொழிற்சாலை ஆலோசகர் மற்றும் பணிச் செயலாளர் ஆலோசகர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.<br>கம்பனிக்கு உரியதாக ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று மற்றும் பதவியணியை திறைசேரியின் ஊடாக அங்கீகரிக்காத காரணத்தால், இந்த பதவிகளின் தேவை குறித்த கணக்காய்வில் திருப்தி அடைய முடியவில்லை. | நிர்வாகச் செயலாளர் ஆலோசகரின் சேவை 2022.08.30 ஆந் திகதி முதல் நிறுத்தப்பட்டது. எதிர்காலத்தில் அந்தந்த நிரந்தரப் பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்பிய பிறகு உள்ளகக் கணக்காய்வு ஆலோசகரின் மற்றும் தொழிற்சாலை ஆலோசகரின் சேவைகள் நிறுத்தப்படும் என்பது. | நிரந்தர பதவிகளின் தொடர்பான வெற்றிடங்களை நிரப்ப வேண்டும். |
| **(II)** | **XIX அத்தியாயம்** | | | |
| (i) | 6.2 ஆம் பந்தி | செவனகலப் பிரிவில் சேவையில் ஈடுபட்டிருந்த ஓய்வுபெற்றுச்சென்ற 36 உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களை மீள கையளிக்காது 2022 ஆகஸ்ட் 31 கணக்காய்வு திகதி வரையிலும் அத்துமீறிய வகையில் குடியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது.<br>ஓய்வுபெற்றுச் சென்ற சந்தர்ப்பங்களில் உத்தியோகபூர்வ இல்லங்களை மீள பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. மேலும், | பெல்வத்தை பிரிவினால் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட 08 வீடுகளில் 2 வீடுகள் நிறுவனத்தால் கையகப்படுத்தப்பட்டு மேலும் 2 வீடுகளை சுவீகரிப்பதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் 2 வீடுகள் விசேட சேவை மதிப்பீடாக ஒப்பந்தங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இரண்டு வீடுகளில் உள்ள தரப்பினரும் நிறுவனத்துடன் சட்ட | பணி ஓய்வு பெறும் காலப்பகுதியிலிருந்து ஊழியர்களை வெளியேற்றுவதற்கான நடைமுறைகளைத் தயாரிக்கவும், ஏற்கனவே ஓய்வு பெற்றவர்களை வெளியேற்றவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெல்வத்த பிரிவில் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட 8 உத்தியோகபூர்வ இல்லங்கள் மீள கையளிக்கப்படாது அவற்றின் மின்சாரப் பட்டியல்களும் கம்பனியால் செலுத்தப்பட்டவாறு காணப்பட்டது. | நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். | |
| (ii) | 5.1 ஆம் பந்தி | பெல்வத்த பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 520 உத்தியோகபூர்வ இல்லங்கள் காணப்பட்ட போதிலும், உத்தியோபூர்வ இல்லங்களை பயன்படுத்தும் உத்தியோகத்தர்களின் மற்றும் ஊழியர்களிடமிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு இலவச குடியிருப்புகள் வழங்குவது நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2011 நவம்பரில் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட சகல சலுகைகளும் அவ்வாறே ஊழியர்களுக்கும் வழங்கப்படும் என 2011 நவம்பரில் நிறுவன நிர்வாகம் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொண்டு லங்கா சீனிக் கம்பனிக்கு ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி தற்போது வரை இலவச குடியிருப்புகள் வழங்கப்படுகின்றன. உத்தியோகபூர்வ இல்லங்களை பராமரித்தல் முன்பிருந்து தற்போது வரை நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றமை. | வீட்டு வாடகை மற்றும் வீடுகளின் பழுதுபார்ப்பு செலவுகளை உத்தியோகத்தர் ஏற்க வேண்டும் மற்றும் நிறுவனம் செலுத்திய கட்டணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) | 5.2 ஆம் பந்தி | செவனகல பிரிவினை அரசாங்கத்திற்கு சுவீகரிப்பதற்கு முன்னர் மாதமொன்றுக்கு ரூபா 20 முதல் ரூபா 85 இற்கு இடைப்பட்டதாக அறவிடப்பட்ட வீட்டு வாடகை | வருங்காலத்தில் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு வாடகை வசூலிப்பது குறித்து நிறுவன நிர்வாகக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டு வசூலிக்கப்படும் வாடகை | நடைமுறைக்கு பொருந்தும் வகையில் வீட்டு வாடகை திருத்தியமைக்கப் பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக இதுவரையிலும் திருத்தப்படாது காணப்பட்டது. | குறித்து அரச விலை மதிப்பீட்டு நிறுவனத்தின் உதவியை நாட முடிவு செய்யப்பட்டது. | |
| (iv) | 5.8 ஆம் பந்தி | தண்ணீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம் ஆகியவை உத்தியோகத்தரே செலுத்த வேண்டும் என்றாலும், செவனகல பிரிவில் 60 யூனிட்டுகளுக்கு மேல் தண்ணீர் பயன்படுத்தினால் மட்டுமே அந்த உத்தியோகத்தரிடமிருந்து கட்டணம் வசூலிக்கும் முறையைக் கடைப்பிடித்து, மாதாந்திரச் சலுகையாக ரூபா 250 மின் நுகர்வுக்கு வழங்கிய பின்னர் மீதமுள்ள மின் கட்டணத்தை சம்பளத்தில் இருந்து அறவிடுவதன் மூலம் கம்பனியால் கிரயத்தைஏற்கும் முறையொன்று பின்பற்றப்பட்டிருந்தது. அதன்படி, 2020 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர் குடியிருப்புகளுக்கான மின்சாரக் கட்டணமாக ரூபா 763,660 கம்பனியால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், பெல்வத்தை பிரிவில் உள்ள தொழிற்சாலை, அலுவலகம் மற்றும் 564 குடியிருப்புகளுக்கு ஒரு பொதுவான மின்சார மானியொன்று பயன்படுத்தப்பட்டதுடன் அது தொடர்பான மின்சாரச் செலவு 2,416,931 யூனிட் மின்சாரத்திற்காக கம்பனிக்கு ஏற்பட்டது. 2020 ஆம் ஆண்டில் ரூபா 38,769,975 ஆக இருந்தது. மேலும், பெல்வத்தை பிரிவில் இருந்து சில கிலோமீற்றர்களுக்கு அப்பால் யாலபோவயில் அமைந்துள்ள நிர்வாக குடியிருப்புகளுக்கு தனியான | செவனகல பிரிவு ஊழியர்களுக்கு நீர் கட்டணம் மற்றும் மின்சார கட்டணம் ஆகியவற்றில் கடந்த காலத்திலிருந்து சலுகைகளை வழங்கியதுடன், சினி தொழிற்சாலைக்கு பெறப்பட்ட பொது மின்சாரம் மூலம் பெல்வத்தை பிரிவின் வளாகத்தில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டு வருவதுடன், நிறுவனத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையத்தினால் இந்த வீடுகளுக்கு இலவச நீர் வழங்கப்படுவதுடன், தனித்தனியாக மானிகள் பொருத்தப்படவில்லை என்பதும், பெல்வத்த பிரிவிற்கு சொந்தமான யாலபோவ பிரதேசத்தில் உள்ள குடியிருப்புகளுக்கு தனியான மின்சாரம் மற்றும் தண்ணீர் மானிகள் பொருத்தப்பட்டுள்ளதுடன், ஊழியர்களுக்கான வரப்பிரசாதமாக குடியிருப்புகள் மற்றும் தண்ணீர் மற்றும் மின்சாரம் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது என்பதும், இது தொடர்பில் கட்டணம் வசூலஜித்தல் தொடர்பில் மேற்படி முகாமைத்துவக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது என்பது. | மின்சாரம், குடிநீர் கட்டணத்தை அலுவலரே ஏற்க வேண்டும். நிறுவனம் செலுத்திய கட்டணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மின்சார மானிகள் இருந்தபோதிலும், 2020 ஆம் ஆண்டில் அந்தக் காலாண்டுகளுக்கான நீர்க் கட்டணமாக ரூபா 81,591 மற்றும் மின்சாரக் கட்டணமாக ரூபா 253,607 தொகையை கம்பனி ஏற்றுக்கொண்டது. | | |
| (இ) | 2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிக் 2.14.1 திருத்தப்பட்ட பந்தி | ரூபா 10 மில்லியன் வரையிலுமான பெறுகைகள் மாத்திரயம் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், பெல்வத்த மற்றும் செவனகல பரிவில் ரூபா 153,400,390 கூட்டுத்தொகைக்கு உரிய 07 கொள்வனவுச் சந்தர்ப்பங்களில் மற்றும் ரூபா 66,882,405 கூட்டுத்தொகையான 4 கொள்வனவுச் சந்தர்ப்பங்களிலும் தொடர்புடைய வழிகாட்டிக்கிணங்காத வகையில் திணைக்கள பெறுகைகள் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | தற்போது கொள்வனவுகளை மேற்கொள்ளும் போது தொடர்படைய வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதி PED/ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (I) | 8.2.2 பந்தி | மிகைப் பணத்தை நிலையான வைப்பில் இடுவதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு மற்றும் உரிய அமைச்சரின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், செவனகல பிரிவில் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 26 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 1,097,463,943 தொகைக்காக இணக்கப்பாடு மற்றும் | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினை பெற்று மிகைப் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளமை. | மிகைப் பணம் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ள ப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (II) | 8.3.3 (அ) பந்தி | நிறுவனமொன்றுக்கு மிகையூதியம் மற்றும் ஊக்குவிப்பு படிகளை பெற்றுக்கொள்ள நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாட்டினை பூர்த்தி செய்யாது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கொழும்பு தலைமை அலுவலகம், செவனகல மற்றும் பெல்வத்த பிரிவுகளுக்கு 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 163,848,135 ஆன ஊக்குவிப்புப் படிகள் செலுத்தப்பட்டிருந்ததுடன், செவனகல பிரிவு மற்றும் கொழும்பு தலைமை அலுவலகம் ஆகியவற்றுக்க 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 17,347,859 ஆன மிகையூதியம் செலுத்தப்பட்டிருந்தது. | ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளின் பேரில் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்று 2013 ஆம் ஆண்டு முதல் ஊக்குவிப்பு படிகள் வழங்கப்பட்டு வருகின்றன. | ஊக்குவிப்பு படிகளை வழங்குவதற்கு முன் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (III) | 9.3 ஆம் பந்தி | பொது முயற்சிகள் திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று அங்கீகரித்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறானதொரு அங்கீகாரமின்றி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். 2019 ஆம் ஆண்டின் போது பதவியணியானது 933 ஆக காணப்பட்டதுடன், 2020 ஆம் ஆண்டின் போது அது 1070 ஆக காணப்பட்டது. அதற்கமைய நிலவும் பதவிகளின் எண்ணிக்கை, | நிறுவனத்திற்கு இதுவரையிலும் அங்கீகரிக்கப்பட்ட மனிதவளத் திட்டமொன்று அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று இல்லாதிருந்ததுடன், 2022/2023 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தினால் மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று முகாமைத்துவ சேவைகளை சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை. | கம்பனிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் மற்றும் அனைத்து ஆட்சேர்ப்புகளும் அதற்கு இணங்க செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்க்கப்பட்ட மற்றும் பதவியுயர்வு வழங்கப்பட்ட நடைமுறை மற்றும் சம்பள படிமுறைகளின் சரியானதன்மை தொடர்பில் கணக்காய்வில் பரிசோதிக்க முடியாதிருந்தது. | | |
| (உ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தி | மீளாய்வாண்டின் பாதீடு, உத்தேச பிரதான முதலீடு, இயலளவினை அதிகரித்தல், வருடாந்த பெறுகைகள் திட்டம், கடன் மீள் செலுத்தும் திட்டம், மனிதவள அபிவிருத்தி திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் ஆகியவை உள்ளடக்கப்பட்டு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெல்வத்த பிரிவினால் 2020 ஆம் ஆண்டுக்கான பாதீடு, வருடாந்த பெறுகைகள் திட்டம், வருடாந்த பெறுகைகள் திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு திட்டம் ஆகியவை தயாரிக்கப்பட்டுள்ளமை. | வருடாந்த செயல்நடவடிக்கைகத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2015 மே 25 ஆந் திகதிய PED 1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (I) | 3.1 ஆம் பந்தி | தொடர்புடைய சுற்றறிக்கைக்கமைய உத்தியோகத்தர்களுக்குரிய எரிபொருளின் அளவினை விட மேலதிகமாக பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தர்களின் நிறுவன சுற்றறிக்கையின் ஊடாக செவனகல பரிவில் உத்தியோகபூர்வ வாகனங்களை ஒதுக்கிய உத்தியோகத்தர்களுக்கு அந்த உத்தியோகபூர்வ வாகனங்களில் அவர்களின் தனிப்பட்ட பயணங்களுக்கு 960-1750 கிலோ மீட்டர்கள் வரையான அளவு இடமளிக்கப்பட்டிருந்ததுடன், 07 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பயணங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அந்த எரிபொருள் செலவினம் ரூபா | சுற்றறிக்கைகள் மற்றும் ஏற்பாடுகளின்படி, சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த நிறுவனம் தொலைதூர மற்றும் தொலைதூர மாகாணத்தில் அமைந்துள்ளதால், அத்தகைய இடத்தில் பணியாற்றுவதற்கான ஊக்கமாக இந்த சலுகைகள் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 1,326,844 ஆக காணப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டின் போது அந்த பெறுமதியானது ரூபா 1,533,716 ஆகும். மேலும், உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய அந்த உத்தியோகத்தர்களுக்கு தமது எரிபொருள் எல்லையை விஞ்சி செவனகல பிரிவின் உத்தியோகபூர்வ பயணங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போதும் ரூபா 453,068 தொகை கூடுதலாக செலவிடப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டின் போது எல்லையினை விஞ்சிய எரிபொருள் செலவினம் ரூபா 667,381 ஆகும். | | |
| (II) | 3.8 ஆம் பந்தி | உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பயணங்களுக்காக சாரிதிகளுக்கு செலுத்தப்படும் மேலதிக நேர மற்றும் ஏனைய ஒருங்கிணைந்த படிகள் குறித்த உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், செவனகல பிரிவின் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பயணங்களுக்கு ஈடுபடுத்தப்பட்ட கம்பனியின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக சாரதி தங்கல் படிகள், தங்குமிட கொடுப்பனவு மற்றும் மேலதிக நேர படி எனுமாறு கம்பனியால் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 868,975 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2021 ஆம் ஆண்டின் போதுத் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பயணங்களுக்காக சாரதிகளுக்கு செலுத்திய அந்த செலவினம் ரூபா 418,500 ஆகும். 2020 இற்கு | 2022/01/01 ஆந் திகதி முதல் PED 1/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட பிரயாணங்களுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை ஒதுக்கி எரிபொருள் வழங்குதல் இடைநிறுத்தப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னைய ஆண்டுகளில் அந்த விபரங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய 08/2019 ஆம் இலக்க நிதி, பொருளாாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி சுற்றறிக்கையின் 2.1 ஆம் பந்தி | 2020 சனவரி 31 ஆந் திகதிக்கு முன்னர் அரசின் அனைத்து நிறுவனங்களும் இலத்திரனியல் பெறுகைகள் கட்டமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி இ-பெறுகைக்காக பதிவு செய்திருக்கவில்லை. | அரசின் இலத்திரனியல் பெறுகைகள் கட்டமைப்பீல் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அரசின் இலத்திரனியல் பெறுகைகள் கட்டமைப்பீல் பதிவு செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 1,171,901,614 ஆன இலாபமாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 1,362,373,144 ஆக இருந்தது. அதற்கமைய கடந்த வருடத்திற்க ஒப்பாக நிதி விளைவுகளில் ரூபா 2,534,274,758 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனை விலையிலான அதிகரிப்பு காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | எத்தனோல் விற்பனை விலையானது உரிய நடைமுறையொான்றில்லாது ரூபா 500 மற்றும் ரூபா 550 எனுமாறு அவ்வப்போது தலைவரால் விலைகள் தீர்மானீக்கப்பட்டு 2020 ஆம் ஆண்டின் போது 9,774,282 லீட்டர் எத்தனோல் விற்பனை செய்யப்பட்டு ரூபா 4,739,495,500 ஆன வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. அந்த ஆண்டின் போது ஒரே சமனான உற்பத்திளை மேற்கொள்ளும் போட்டி நிறுவனத்தினால் எத்தனோல் லீட்டரொன்று ரூபா 683 முதல் ரூபா 700 எனும் விலைகளில் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், உரிய விலைக் கொள்கைகள் பின்பற்றப்பட்டிராத காரணத்தால் கம்பனிக்கு அந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | சந்தையில் நிறுவனத்தின் எத்தனாலுக்கான தேவையின் அடிப்படையில், நிறுவனம் தனது தயாரிப்புகளை விற்கக்கூடிய வகையில் போட்டி விலையை முடிவு செய்துள்ளது. முந்தைய ஆண்டில் ரூபா 300 இனை விட குறைவாக காணப்பட்டதுடன், மற்றும் அரசாங்கம் 2020 இல் எத்தனால் இறக்குமதியை நிறுத்தியதுடன், அந்த நிலையில் அந்த விலையில் எத்தனாலை விற்பது மிகவும் சவாலானதாக மாறியுள்ளது. | விற்பனை விலையை உரிய முறையில் நிர்ணயிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கம்பனியின் பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளின் திட்டமிடப்பட்ட இலக்குகள் மமற்றும் உள்ளபடியான செயலாற்றல் தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | மதிப்பிடப்பட்ட சீனி உற்பத்தி 54,645 மெட்ரிக் டன்களாக இருந்தபோதிலும், உண்மையான உற்பத்தி 39,697 மெட்ரிக் டன்களாக இருந்தது, இதன் விளைவாக, இலக்கு உற்பத்தியை எட்டாத அளவு 14,948 மெட்ரிக் டன்கள் அல்லது 27 சதவீதமாக இருந்தது. | இந்த ஆண்டு எதிர்பார்த்த உற்பத்தி அளவை விட சுமார் 5,372 மெட்ரிக் டன் சீனி குறைவாகவே உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், எதிர்பார்த்த கரும்பு விநியோகம் 375,000 மெட்ரிக் டன் என்றாலும், தொழிற்சாலையால் 323,106 மெட்ரிக் டன் வழங்க முடிந்தது. அத்துடன், எதிர்பார்க்கப்படும் சீனி பிரித்தெடுக்கும் வீதமும் 7.72% இலிருந்து 7.30% ஆக வீழ்ச்சியடைந்துள்ளதுடன், சரியான நேரத்தில் உரம் கிடைக்காதமையும், அதே பிரச்சினைகள் செவனகல துறையையும் பாதித்தமையும் இதற்கு முக்கிய காரணமாகும். | உற்பத்தி திறனை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | ஆண்டுக்கான கரும்பு அரைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட அளவு 677,322 மெட்ரிக் டன்களாக இருந்தபோதிலும், உண்மையான அளவு 567,563 மெட்ரிக் டன்களாக இருந்தது. இதன் விளைவாக, திட்டமிட்ட அளவை 109,759 மெட்ரிக் டன் அல்லது 16 சதவீதம் அடைய முடியவில்லை. | இந்த ஆண்டு கரும்பு 51,896 மெட்ரிக் டொன்னுக்கும் குறைவாகவே விநியோகிக்கப்பட்டுள்ளது. 2019, 2020ஆம் ஆண்டுகளில் நாட்டில் உரத் தட்டுப்பாடு நிலவியதால், நெல் விவசாயத்துக்கு மட்டுமே உரங்களை வெளியிட அரசு முடிவு செய்திருந்தது. அதன்படி கரும்பு சாகுபடிக்கு உரமிடுவது மட்டுப்படுத்தப்பட்டதால், ஒரு அலகு பரப்பில் கிடைக்கும் கரும்பு விளைச்சல் வெகுவாகக் குறைக்கப்பட்டதுடன், இதற்கு மேலதிகமாக காட்டு யானைகளால் உண்டான அழிவு மற்றும் செவனகல பிரதேசத்தில் பயிர்ச்செய்கையால் ஏற்பட்ட தாமதமான வெண்படை நோய் மற்றும் இந்த வருடங்களில் கரும்பு வழங்கல் குறைவடைந்தமைக்கு காரணமாக அமைந்திருந்ததுடன், இது போன்ற காரணங்களால் இதே | கரும்பு விநியோகம் மற்றும் சர்க்கரை சதவீதத்தை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பிரச்சினைகள் செவனகல பிரிவையும் பாதித்துள்ளன. | |
| (iii) | கடந்த 05 வருடங்களில் கம்பனியின் வருடாந்த சீனி உற்பத்தி தொடர்பான தரவுகளை ஆராய்ந்ததில், அதிகூடிய சீனி உற்பத்தியாக 51,422 மெ.தொன் சீனி 2016 ஆம் ஆண்டின் போது பதிவாகியிருந்த போதிலும், நடப்பாண்டின் போது அது 39,697 மெ. தொன்கள் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. அதன்படி 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது நடப்பு ஆண்டில் உற்பத்தி 11,725 மெ.தொன்களால், அதாவது 23 சதவீதத்தினால் குறைந்துள்ளது. | 2016ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரையிலான சர்க்கரை உற்பத்தியைக் கருத்திற்கொள்ளும் போது, 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2017, 2018, 2019, 2020ஆம் ஆண்டுகளில் தொழிற்சாலைக்குக் கிடைத்த கரும்பு அளவு குறைவாக இருந்ததே சர்க்கரை உற்பத்தி படிப்படியாகக் குறைவதற்குக் காரணமாக அமைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டை விட சர்க்கரை பிரித்தெடுக்கும் சதவீதமும் ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளமை. | உற்பத்தி திறனை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | வருடாந்த எத்தனால் உற்பத்தி தொடர்பான தரவுகளை ஆராய்ந்ததில், 2016 ஆம் ஆண்டில் 11,917,279 லீட்டர் எத்தனால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது, 2017 ஆம் ஆண்டில் 7,045,223 லீட்டர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது மற்றும் 2018 ஆம் ஆண்டில் 9,787,942 லீட்டர் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது மற்றும் 2019 ஆம் ஆண்டின் போது 5,212,559 லீட்டர்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 2020 ஆம் ஆண்டு 8,813,623 லிட்டராக இருந்தது. இதன்படி, 2020ஆம் ஆண்டு உற்பத்தியானது 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 3,103,656 லீட்டர் அல்லது 26 வீதத்தால் குறைந்துள்ளமை அவதானிக்கப்பட்டது. | எத்தனால் உற்பத்தி அதன் கேள்வி மற்றும் நிறுவனம் வைத்திருக்கும் வெல்லப்பாகு கையிருப்பைப் பொறுத்தது என்பதுடன், 2016 ஆம் ஆண்டை விட மற்ற ஆண்டுகளில் எங்கள் நிறுவனம் தயாரிக்கும் எத்தனாலின் தேவை குறைந்துள்ளதுடன், 2019 ஆம் ஆண்டு இந்த நிலைமை அதிகம் பாதிக்கப்பட்டு உள்ளமையும், வெல்லப்பாகு கையிருப்பு இல்லாததால், சில ஆண்டுகளில் உற்பத்தியை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுடன் 2016 ஆம் ஆண்டை விட, 2020 ஆம் ஆண்டு, எத்தனால் உற்பத்தி குறைந்துள்ளது. ஆனால் 2020 ஆம் ஆண்டில் எத்தனால் இறக்குமதி நிறுத்தப்பட்டதன் மூலம், 2021 ஆம் ஆண்டில் மீண்டும் அதிகரிக்க முடிந்தது. | உற்பத்தி திறனை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (v) | மீளாய்வாண்டில் செவனகல ஆலையின் அரைக்கும் திறன் 6,009 மணிநேரமாக இருந்த போதிலும், உண்மையான அரைக்கும் நேரம் 3,860 மணிநேரமாக இருந்தது. கரும்புத் தண்டுகள் இல்லாதது, தொழிற்சாலை செயல்படாதது | எதிர்காலத்தில் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கரும்ப வழங்கலை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போன்ற பிரச்னைகளால் 2,149 மணி நேரமாக தொழிற்சாலை செயல்படாமல் இருந்ததால், உற்பத்தி குறைவடைந்தமைக்கு தாக்கமளித்திருந்தது. | | |
| (vi) | கம்பனிக்கு சொந்தமான கரும்பு பயிரிடக்கூடிய மற்றும் மொத்த நிலப்பரப்பு 14,168 ஹெக்டேராக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் பயிரிடப்பட்ட மொத்த நிலத்தின் அளவு 12,785 ஹெக்டேராக இருந்தது, இதன் விளைவாக, பயன்படுத்தப்படாத நிலத்தின் அளவு 1,383 ஹெக்டேயர்களாக அவதானிக்கப்பட்டது. | இங்கு, நிறுவனம் பயிரிடும் நிலம் மற்றும் குடியிருப்புகளின் விவசாய நிலங்கள் தொடர்பாக நிறுவனம் நேரடியாக தலையிட முடியும் என்றாலும், வெளியாட்களின் விவசாய நிலங்களில் நிறுவனம் செல்வாக்கு செலுத்த முடியாது, மேலும் வெளி விவசாயிகள் நிறுவனம் வழங்கும் உர மானியம், கரும்பு விலை அதிகரிப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு கரும்பு பயிரிடுவதற்கு முனவருவதுடன், அதனைவிட நலன் பயக்கும் வேறு பயிர்கள் காணப்பட்டால் கரும்ப பயிர்ச்செய்கையிலிருந்து அகன்றுவிடுவதுடன், பயிரிடப்பட்ட நிலத்தின் அளவு மாற்றங்கள் வெளி விவசாயத் துறையில் இடம்பெறுவதுடன், மேலும் நிறுவனத்தின் அனைத்து நிலங்களிலும் எந்த வகையிலும் பயிரிடுவது சாத்தியமில்லை. | முழு நிலத்திலும் விவசாயம் செய்தல் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (vii) | சீனி உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலைகளில் இயந்திரங்களில் இடப்படும் கரும்பு தண்டுகளில் காணப்படும் சீனியின் அளவு 2016 ஆம் ஆண்டு செவனகல மற்றும் பெல்வத்தை பிரிவுகளில் முறையே 7.3 சதவீதம் முதல் 10.62 சதவீதத்திலிருந்து மீளாய்வாண்டில் 6.53 வீதமாகவும், 9.50 வீதமாகவும் குறைவடைந்திருந்தது. சீனி பிரித்தெடுப்பு சதவீதமும், 2016 ஆம் ஆண்டின் 7.3 மற்றும் 8.2 சதவீதமாக காணப்பட்ட போதிலும், நடப்பாண்டில் முறையே 6.59 மற்றும் 7.3 சதவீதமாக கிரமமாக குறைந்துள்ளது. | வரற்சியான காலநிலையின் மத்தியில் அவசர தீப்பிடித்தல் ஏற்படல் 2016 ஆம் ஆண்டை விட அதிகளவான எரிந்த நிலையிலுள்ள கரும்புகளை தொழிற்சாலைக்கு அனுப்ப நேர்ந்ததுடன், Covid - 19 தொற்றுநோய் காரணமாக அறுவடை செய்யப்பட்ட கரும்பு உரிய காலத்தில் தொழிற்சாலைக்கு கொண்டு வருவதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் முன்னர் நிலவிய மழையுடனான காலம் தாக்கமளித்துள்ளமை. | சீனியின் வீதத்தினை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (viii) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை ஹெக்டேர் ஒன்றின் கரும்பு விளைச்சல் | ஒரு ஹெக்டேயருக்கான கரும்பு விளைச்சல் குறைவடைந்தமைக்கு தாக்கமளித்த விடயங்களாக | கரும்பு உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | படிப்படியாகக் குறைந்து வந்ததுடன், 2018 ஆம் ஆண்டு செவனகல மற்றும் பெல்வத்தை பிரிவுகளில் முறையே 85 மற்றும் 49 மெற்றிக் தொன்களாக இருந்த கரும்பு விளைச்சல் படிப்படியாக குறைவடைந்து மீளாய்வாண்டின் போது 78 மற்றும் 38 மெற்றிக் தொன்களாக குறைந்துள்ளது. | உள்நாட்டு சந்தையில் நிலவிய உரத் தட்டுப்பாடு காரணமாக கரும்பு பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்தப்படும் உரத்தின் பற்றாக்குறை காரணமாக கரும்பு பயிர்ச்செய்கைக்கு ஈடுபடுத்தப்பட்ட உரத்தின் அளவானது குறைவடைந்ததுடன், வரற்சியான காலநிலைமை மற்றும் நிலவிய மழையுடனான காலநிலை தாக்கமளித்துள்ளது என்பது. | வேண்டும். |
| (ix) | தொழிற்சாலைக்குத் தேவையான ஆற்றல், சர்க்கரை உற்பத்தி செயல்பாட்டில் இருந்து அகற்றப்படும் பேக்ஸின் உதவியுடன் உற்பத்தி செய்யப்படுகிறது, அது போதுமானதாக இல்லாதபோது, இயந்திரங்களை இயக்க மாற்று ஆதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் தொழிற்சாலை மின் உற்பத்தி 15,682 மெகாவாட்டாக அதிகரித்திருந்த போதிலும், அது நடப்பு ஆண்டில் 12,579 மெகாவாட்டாகக் குறைந்திருந்த போதிலும், கரும்பு அரைத்தல் குறைக்கப்பட்டதன் காரணமாக இந்நிறுவனம் நிலைமையை மேம்படுத்தத் தவறிவிட்டது. | தொழிற்சாலையில் கரும்பு அரைக்கும் நாட்களில் மட்டுமே வலுச்சக்தி உற்பத்தி செய்யப்படுகிறது, மேலும் 2016 ஆம் ஆண்டில் சுமார் 416,340 மெ.டன் கரும்பு அரைக்கப்பட்டிருந்ததுடன், 2020 ஆம் ஆண்டில் 323,106 மெ.டன்களாகக் குறைந்துள்ளது, எனவே அதற்க ஒப்பாக அரைக்கும் நாட்களும் குறைந்துள்ளதுடன் மின்சார உற்பத்தியும் குறைந்துள்ளது. | கரும்பு அரைக்கும் சதவீதத்தை அதிகரிக்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | செவனகலப் பிரிவின் காபன் டயோக்சைட் வாயு விற்பனைக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் பெற வேண்டிய ரூபா 7,473,696 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை மற்றும் 06 வருட காலமாக விற்பனை விலையை திருத்தியமைப்பதற்கும், நிறுவனத்தின் வருமானத்தை மேம்படுத்துவதற்கு முறையாக நடவடிக்கை எடுக்கப்படாததால், உற்பத்தி செய்யப்பட்ட காபன் டயோக்சைட் வாயுவின் அளவை அளவிடுவதற்கு ஒரு மானியை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் காபன் டயோக்சைட் உற்பத்தியிலிருந்து கம்பனியின் வருமானத்தை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை | உடன்படிக்கையின் பிரகாரம் இந்த கொள்வனவாளருக்கு 60 நாட்கள் கொண்ட கால எல்லை வழங்கப்பட்டுள்ளது. இந்த இயந்திரக்கூடம் 2015 ஆம் ஆண்டின் இறுதியிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் அடிப்படையில் போதிய அளவிலான சக்கரைப்பாகு எரிவூட்டப்படாமையால் 2015/2016 ஆம் ஆண்டுகளின் போது அந்த நிறுவனத்திற்கு நட்டமொன்று ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து ரூபா 7,473,696.48 தொகைக்கு இதுவரை பணம் செலுத்தப்பட்டிராததுட்ன, எஞ்சிய பணம் உரிய முறையில் அறவிடப்பட்டுள்ளதுட்ன, 2021 திசெம்பர் 01 ஆந் திகதி முதல் | விலையை சீரமைக்கவும், உற்பத்தியாகும் காபன் டயோக்சைட் வாயு அளவை அளவிடுவதற்கு மீட்டர் பொருத்தவும், நிலுவைத் தொகையை வசூலிக்கவும், ஒப்பந்த முறைப்படி செயல்படவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | Co2 ஒரு கிலோ ரூபா 32 படியாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், தற்போது Co2 நிறையின் அடிப்படையில் கணிப்பீடு மேற்கொள்ளப்படுவதுடன், இதற்கு பொருத்தமான மானியொன்றை பொருத்தும் இயலுமை தொடர்பில் ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | |
| (ஈ) | பெல்வத்தை பிரிவு 2013 ஆம் ஆண்டு குத்தகை வசதியின் கீழ் ரூபா 128,910,000 பெறுமதியான கிரேன் ஒன்றை கொள்வனவு செய்து அதற்கு ரூபா 120,750,000 செலுத்தி அதற்கு தேவையான மின்சாரத்தை வழங்குவதற்காக ரூபா 2,254,850 செலவிட்டிருந்தது. ஆயினும்கூட, வழங்குநர் ஒப்புக்கொண்டபடி தொழிற்சாலையில் இயந்திரம் நிறுவப்படாததால் வாங்கிய நாளிலிருந்து செயலற்ற நிலையில் காணப்பட்ட இந்தச் சொத்தின் மூலதனச் செலவாக ரூபா 123,004,850 செலுத்தப்பட்டதுடன் இந்த சிக்கனமற்ற செலவுக்கு காரணமானவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | தொழிற்சாலைக்குள் கரும்புகளை புகுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு 03 மாத காலப்பகுதிக்குள் பழுதடைந்த கிராக்கன் இயந்திரம் பழுதுபார்க்கப்பட வேண்டிய போதிலும் அது வெற்றியளிக்காததால் ஒரு பகுதிக்கான குத்தகை பெறுமதியான ரூபா 11,812,500 இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் இந்த செயற்திட்டம் தொடர்பில் நிதிக் குற்றப் புலனாய்வு துறை விசாரணை நடத்திய போதிலும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. மேலும் 2023 ஆம் ஆண்டு இத்திட்டத்தை மீண்டும் தொடங்க சம்பந்தப்பட்ட வழங்குநருடன் கலந்துரையாடி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், இந்த வருடத்தின் பெரும் போகத்தில் 03 மாதங்கள் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தி செயன்முன்னேற்றத்தை அறிக்கையிடுமாறு முகாமைத்துவத்தினால் வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளமை. | உள்ளக விசாரணை மூலம் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரைக் கண்டறிந்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும், நிதிக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்து அதனை மீள அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | செவனகல பிரிவின் தொழிற்சாலையின் தேவைக்காக ரூபா 11,412,646 தொகைக்கு இந்தியாவில் இருந்து 2018 ஆம் ஆண்டு இறக்குமதி செய்யப்பட்ட எலக்ட்ரோ மேக்னடிக் பிரிப்பான் இயந்திரம் (Electro Magnetic Separator) இதுவரை | இதுகுறித்து, தொழிற்சாலை பிரிவின் உத்தியோகத்தர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு, இயந்திரங்களை பொருத்தவும், தேவையான அறிவுறுத்தல்களை பெறவும், உரிய கருவிகளை இறக்குமதி செய்த இந்திய நிறுவன அதிகாரிகளின் | இயந்திரங்களை நிறுவி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவப்படாதிருந்ததுடன், நிறுவனத்தின் பொறியியலாளர் அது பொருத்தமான நிலையில் இருந்ததற்கான சான்றிதழை வழங்கவில்லை. மேலும், இந்த பணம் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கொள்முதல் முன்பணமாக கணக்குகளுக்கு முன்கொண்டு வரப்பட்டதுடன், நடப்பாண்டிலும் இந்த சொத்து பயன்படுத்தப்படாது காணப்படுகின்றமையால் அது தொடர்பான செலவினம் ஒரு விளைவற்ற செலவாக மாறிவிட்டது. | உதவியை பெற வேண்டும் என, தெரிவிக்கப்பட்டதுடன், குறித்த இயந்திரத்தை நிறுவிய பின்னர் முற்பணக் கணக்கை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | |
| (ஊ) | அரசாங்கத்திற்கு சுவீகரிப்பதற்கு முன்னர் காணப்பட்ட செவனகல சீனிக் கைத்தொழில் நிறுவனம் மற்றும் செவனகல சமூக ஒழுங்கமைப்பு மற்றும் பரஸ்பர சங்கத்துடன் 2008 ஒக்தோபர் 05 முதல் 2009 ஒக்தோபர் 04 வரையிலான ஒரு வருட காலப்பகுதிக்கு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கம்பனியின் நீர் மானியிலிருந்து இருந்து பரஸ்பர உதவி சங்கத்திற்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 வரை, அதாவது 10 ஆண்டுகளுக்கும் மேலாக, எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் ஏதுமின்றி, நிறுவனத்தின் நீர் மீட்டரில் இருந்து அந்த சங்கத்திற்கு நீர் வழங்கப்பட்டு அதற்காக 2008 இல் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்ட மாதாந்திர நீர் அலகுகளுக்கான கட்டணம், அதிகபட்சமாக 1,325 க்கு உட்பட்டது, 2020 ஆம் ஆண்டு வரை எந்தவிதமான திருத்தமும் இன்றி வசூலிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் வருடங்களில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | எழுத்துமூல உடன்படிக்கையின் ஊடாக சங்கத்திற்கு கம்பனியின் நீர் மானியிலிருந்து நீர் வழங்கப்படுதல் வேண்டும். |

## 3. ஏனைய கணக்காய்வு அவதானிப்புகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சீனி விற்பனை தொடர்பான கம்பனியின் பெறுகைகள் குழுவின் கட்டமைப்பு மற்றும் பெறுகைகள் குழுவின் வரம்புகள் மற்றும் சீனி விற்பனை தொடர்பான குறைந்தபட்ச விலை உள்ளிட்ட ஒரு முறையான விலைக்கேள்வி நடைமுறையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவில்லை மற்றும் 100 முதல் 1,000 மெட்ரிக் டன்களுக்கு இடையே உள்ள அனைத்து சீனி அளவுகளையும் அதாவது ரூபா 10,510,000 முதல் ரூபா 130,410,000 வரையிலான அனைத்து சீனி கையிருப்புகளும் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் ஊடாக விற்பனை செய்யப்பட்டிருந்தன. | விலைக்கேள்வி சபைக்காக அமைச்சில் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை மற்றும் இனைத்து சீனி இருப்பினையும் விற்பனை செய்தல் திணைக்களத்தின் விலைக்கேள்வி குழுவின் வரையறைகளுக்கு உட்பட்டு இடம்பெறுகின்றமை. | முறையான விலைக்கேள்வி நடைமுறை தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் மாதாந்த ஆலோசகர் கொடுப்பனவாக ரூபா 80,000, போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 50,000 மற்றும் எரிபொருள் கொடுப்பனவு ரூபா 15,000 ஆகியவற்றை செலுத்தி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின்படி 2018 பெப்ரவரி 15 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கு உள்ளகக் கணக்காய்வு மதியுரையாளராக இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார். இந்த ஆலோசகருக்கு 2020 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவுகளின் மொத்த தொகை ரூபா 1,740,000 ஆகவும், 2020 ஆம் ஆண்டுக்கான மிகையூதியம் மற்றும் ஊக்குவிப்புப் படி ரூபா 155,000 ஆகவும் இருந்தது. இந்த ஆலோசகர் 2023 பெப்ரவரி 14 ஆந் திகதி வரை ஆண்டுதோறும் கால நீட்டிப்புகளைப் பெற்று கம்பனியின் ஆலோசனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். | செவனகல பிரிவின் தலைமை உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, உள்ளக கணக்காய்வு ஆலோசகரின் சேவை பெற்றுக்கொள்ளப்படும். | பதிற்கடமை படிகளை செலுத்துதல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் VII அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி இருக்க வேண்டும். |
| (இ) | கம்பனியின் செவனகல பிரிவில் பதில் பொது முகாமையாளராக (உற்பத்தி) பணியாற்றி 2019 செப்டெம்பர் 05 ஆம் திகதி 60 வயது நிறைவடைந்த நிலையில் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவருக்கு இந்த கம்பனியின் பிரதம செயற்பாட்டு உத்தியோத்தரால் ஒரு | அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் சேவை அவசியம் என்பதால், தொழிற்சாலை ஆலோசகரின் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படுவதுடன், எதிர்காலத்தில் அவரது | பதிற்கடமை படிகளை செலுத்துதல் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவையின் VII அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள |

| | | | |
|---|---|---|---|
| | வருட சேவை நீடிப்பு வழங்கப்பட்டு அதன் பின்னர் 06 மாதங்களுக்கு ஒரு தடவை 06 மாதங்களுக்கு நீடிப்பு செய்யப்பட்டு தொழிற்சாலை ஆலோசகராக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு ரூபா 206,500 ஆன மாதாந்த படிகளும், உத்தியோகபூர்வ மற்றும் தனிப்பட்ட பயணங்களுக்கு முறையே 1540 கி.மீ. மற்றும் 1200 கி.மீ. எரிபொருளுடன் கூடிய உத்தியோகபூர்வ வாகனம், பெருநிறுவன மருத்துவ காப்பீட்டு வசதிகள் மற்றும் போனஸ் மற்றும் ஊக்கத்தொகைகளும் செலுத்தப்பட்ட போதிலும் அதற்காக திறைசேரயின் அனுமதி பெறப்படவில்லை. இது. 2020 ஆம் ஆண்டு பணமாக செலுத்தப்பட்ட மொத்த கொடுப்பனவுகள் ரூபா 2,436,047 ஆகவும், 2020 ஆம் ஆண்டில் எரிபொருளுக்கான மொத்த செலவு ரூபா 365,278 ஆகவும் இருந்தது. | சேவை குறித்து முகாமைத்துவத்தினால் தீரமானம் எடுக்கப்படும். | அறிவுறுத்தல்களின்படி இணங்க வேண்டும். |
| (ஈ) | செவனகல பிரிவினால் கொள்முதல் நடவடிக்கைகளில் கட்டளையுடன் அந்த கட்டளைக்குறிய மொத்த தொகையும் முற்பணமாக வழங்கும் முறையைப் பின்பற்றுகிறது மற்றும் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்ற பிறகு அது உரிய முறையில் கிடைத்துள்ளதாக சான்றுபடுத்தாமை மற்றும் தீர்ப்பனவு செய்வதற்காக கவனம் செலுத்தப்படாமை மற்றும் குறித்த பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்ற பிறகு உடனடியாக அந்த முன்பணங்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன்படி, 2020 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் அவ்வாறு வழங்கப்பட்ட ரூபா 12,965,197 தீர்க்கப்படாத முற்பண நிலுவை காணப்பட்டதுடன், அவற்றுள் 28 விநியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 8,753,214 ஆன முற்பணங்கள் 01 முதல் 08 வருடங்கள் வரை தீர்க்கப்படாத முற்பணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | பின்தொடர்தல் மேற்கொள்ளப்பட்டு எதிர்வரும் வருடத்தில் இந்த முற்பணங்களை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பில் துரிதமாக ஆராய்ந்து தீர்ப்பனவு செய்வதற்கும், கொள்வனவு செய்தல் தொடர்பில் முறையான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பெல்வத்த அலகினுள் கோல்ஃப் மைதானத்தை பராமரிப்பதற்காக ஊழியர்களின் சம்பளம் மற்றும் பராமரிப்புக்காக 2018, 2019 மற்றும் 2020 ஆண்டுகளில் முறையே ரூபா 6,232,595, | இந்த கோல்ஃப் மைதானத்தின் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட தொகையினுள் அந்த பிரிவில் | இந்த மைதானத்தை பயன்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 6,618,127 மற்றும் ரூபா 10,751,622 செலவிடப்பட்டுள்ளது. எனினும், இந்த மைதானத்தில் கோல்∴ப் விளையாடாததால், செலவிடப்பட்டுள்ள தொகை விளைவற்றதாகியுள்ளமை அவதானிக்க முடிந்தது. | அந்த பிரிவில் பணிபுரியும் ஊழியர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் உள்ளடங்குவதுடன், அதனை அரசாங்கத்திற்க சுவீகரித்த பின்னர் கோல்∴ப் மைதானம் பயன்படுத்தப்படாவிட்டாலும், அதன் பராமரிப்பைத் தொடர வேண்டியிருந்தது. 2023 ஆம் ஆண்டில், முகாமைத்துவத்தினால் இந்தத் பிரிவின் ஊழியர்கள் ஏனைய உற்பத்தித்திறன் மிக்க பிரிவுகளுக்கு மாற்றப்பட்டு குறித்த செலவினத்தை பதிவழிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | |
| (ஊ) | 2013, 2016 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் பெல்வத்தை பிரிவில் ரூபா 12,664,305 பெறுமதியான 09 வாகனங்கள் பழுதுபார்ப்பதற்காக நிறுவனத்தின் கேரேஜுக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை பழுதுபார்ப்பு நிறைவு செய்யப்படவில்லை. | பழுதுபார்ப்பதற்காக அனுப்பப்பட்ட நிறுவனத்திற்கு சொந்தமான 09 வாகனங்களில் தற்போது ஒரு வாகனம் பழுதுபார்க்கும் பணி நிறைவடைந்துள்ள நிலையில், உதிரி பாகங்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால், மற்றைய வாகனங்களும் அதே நிலையில் உள்ளன. | வாகனப் பழுதுகளை நியாயமான காலத்திற்குள் செய்து, திறம்பட பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். |
| (எ) | பெல்வத்தை பிரிவிற்கு சொந்தமான ரூபா 34,228,844 பெறுமதியான 123 வாகனங்கள் 2010, 2011, 2014 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் செயலிழந்திருந்தன மற்றும் வாகனங்களை ஆராய்ந்து திருத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிறுவனத்துக்குச் சொந்தமான 123 வாகனங்கள் செயலிழந்துள்ளதாக வாகனப் பிரிவு தெரிவித்த போதிலும், அவற்றை நிறுவனத்தின் சொத்துப் பட்டியலில் இருந்து நீக்குவதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்வை எடுக்கப்படாததால் அவை தொடர்ந்தும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் உரிய அங்கீகாரத்தினை பெற்று திருத்துவதற்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | செயலிழந்துள்ள வாகனங்களை நிறுவனத்திற்குப் பயனளிக்கும் வகையில் அப்புறப்படுத்த வேண்டும் அல்லது பழுது பார்க்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | செவனகல பிரிவிலிருந்து கரும்புச் செய்கைக்காகக் கடன் பெற்ற விவசாயிகள், கரும்புச் செய்கையிலிருந்து விலகி வேறு அனுமதியற்ற பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டுள்ளதால், 277 விவசாயிகளிடம் இருந்து ரூபா 12,779,215 கடன் நிலுவையை வசூலித்து கரும்பு சாகுபடியில் ஈடுபட விவசாயிகளை வழிநடத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்தக் கடன்களில், ரூபா 4,333,617 தொகையானது 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையில் உள்ளது மற்றும் ரூபா 6,807,144 தொகையானது 03 முதல் 05 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியாக நிலுவையில் உள்ளது. | 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக கரும்பு சாகுபடி இல்லாத 277 நிலங்களின் நிலுவைகள் இதன் கீழ் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நிலங்களில் கரும்பு மீண்டும் நடவு செய்ய தயாராகும் கரும்பு நிலங்களும், பயிர் சுழற்சிக்கு மாற்றப்பட்ட நிலங்களும் அடங்கும், மேலும் அந்த நிலங்களில் கரும்புகளை மீண்டும் நடவு செய்ய சில மாதங்கள் அல்லது ஒரு வருடம் எடுத்தாலும், கரும்பு நட்டு, அதற்கடுத்த வருடம் தொழிற்சாலைக்கு கரும்புகளை வழங்கிய பிறகு கடனை மீட்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதோடு, இதற்கு மேலதிகமாக, அனுமதியின்றி பயிர்ச்செய்கை மற்றும் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள காணி தொடர்பில் தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | முழு நிலப்பரப்பிலும் விவசாயம் செய்வது தொடர்பில கவனம் செலுத்த வேண்டும். |
| (ஐ) | செவனகல பிரிவு தனது செயற்பாட்டு மூலதனத்தை ஒழுங்காக நிர்வகிக்கத் தவறியதன் காரணமாக, அது தொடர்ச்சியாக வங்கி மேலதிகப்பற்றினை பெற வேண்டியிருந்தது மற்றும் வங்கி மேலதிகப்பற்று வட்டியை செலுத்த வேண்டியிருந்தது மற்றும் 2020 ஆம் ஆண்டில் வங்கி மேலதிகப்பற்று வட்டி ரூபா 7,503,484 தொகையும், 2019 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 7,520,809 மற்றும் ரூபா 11,969,695 ஆக இருந்தது. வங்கிக் கடன்கள் மற்றும் வங்கிக் கடனுதவி வசதிகளைப் பெறுவதற்கு செவனகல பிரிவுக்குச் சொந்தமான ரூபா 285,000,000 பெறுமதியான 07 நிலையான வைப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டிருந்தன. | நிறுவனத்தினால் நாளாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்க போதிய செயற்படு மூலதனத் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படாத சந்தர்ப்பத்தில் வங்கி மேலதிகப்பற்று வசதியினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை. | செயற்படு மூலதனம் உரிய முறையில் முகாமை செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | 2020 டிசம்பர் 31 ஆம் திகதி எம்பிலிப்பிட்டிய கிளையில் இலங்கை வங்கியால் பேணப்பட்ட 2012 ஆம் ஆண்டு செவனகல பிரிவை அரசாங்கத்திடம் கையகப்படுத்தும் சந்தர்ப்பம் முதல் நிலவிய ரூபா 4,958,247 தற்போது செயலிழந்துள்ளதுடன் அந்த பணத்தை முதலீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | ஆக்கபூர்வமான முறையில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | செவனகல பிரிவுக்கு சொந்தமான 106 வாகனங்களில் 14 வாகனங்கள் அந்த பிரிவில் இல்லை என்றும், அந்த வாகனங்கள் தனியார் நிறுவனமொன்றால் கொண்டு செல்லப்பட்டதாகவும் கணக்காய்வுக்கு விடயங்கள் சமர்ப்பிக்கப்பட்டது. 75 வாகனங்கள் இயங்காத நிலையில் செவனகல வளாகத்தில் பழுதடைந்துள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சட்டச் சிக்கல்களின் காரணமாக இந்த வாகனங்களை பழுதுபார்த்து ஓட்டத்தில் ஈடுபடுத்தும் இயலுமை காணப்படாததுடன், வாகன உதிரிப்பாகங்களுக்காக அதிக கிரயம் மேற்கொள்ள நேர்கின்றதுடன், இயந்திரப் பொறியியலாளர்களால் விடயங்களின் முகாமைத்துவம் தெளிவாக மேற்கொள்ளப்பட்டுள்ளமை. | காலாவதியான இருப்புகள் நிறுவனத்திற்கு நலன்பயக்கும் விதத்தில் கைத்தவரிக்கப்பட வேண்டும். |
| (ஔ) | செவனகல பிரிவினால் 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் இருந்து ரூபா 9,564,866 பெறுமதியான ஆவியாக்கும் இயந்திரம் (Evaporator) இறக்குமதி செய்து, சுங்கக் கட்டணமாக ரூபா 3,924,394 செலுத்தியிருந்தது. அதற்கான உதிரிப்பாகங்கள் (SS Tube) விவரக்குறிப்புகளுக்கு இணங்காததால் திருப்பி அனுப்பப்பட்டு 2019 ஆம் ஆண்டில் மறு இறக்குமதியில் செலுத்தப்பட்ட ரூபா 4,830,446 சுங்கக் கட்டணத்தை வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத காரணத்தால் அந்த பெறுமதி கம்பனிக்கு இழப்பாகியிருந்ததுடன், சுங்கக் கட்டணம் செலுத்துவது தொடர்பான ஆவணங்கள் கம்பனியிடம் காணப்படாத காரணத்தால அந்த தொகைகயும் வெளிநாட்டு கட்டளை முற்பணமாக கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டது. | மீள இறக்குமதி செய்யும் போது ரூபா 4,830,446 ஆன சுங்கக் கட்டணம் வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளமை | சுங்கக் கட்டணம் வழங்குநரிடமிருந்து அறவிடுவதற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (க) | பெல்வத்தை பிரிவினால் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டு முதல் விவசாயக் கடனுக்காக வசூலிக்கப்படும் 12 சதவீத வட்டி வருமானத்தில் 3 சதவீதத்தை | நிறுவனம் விவசாயக் கடன்களுக்கு 12% வட்டி அறவிடப்பட வேண்டியதுடன், 2012 ஆம் ஆண்டின் போது அப்போதைய நிறுவனத்தின் | நலன்புரி வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விவசாயிகளின் நலனுக்காகவும், 1 சதவீதத்தை நிறுவனத்தின் நலனுக்காகவும் ஒதுக்கியுள்ளதுடன், 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் விவசாயிகளின் நலன்புரி கணக்கு ரூபா 104,595,757 ஆகவும், நிறுவனத்தின் நலன்புரி கணக்கு ரூபா 34,930,417 ஆகவும் இருந்தது. எனினும், 2012ஆம் ஆண்டு முதல் 2020ஆம் ஆண்டு வரை அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து எந்தவொரு நலத்திட்டங்களும் வழங்கப்படவில்லை. | நிர்வாக அதிகாரத்தினால் இந்த வட்டி வருவாயில் 3% விவசாயிகளின் நலனுக்காகவும், 1% நிறுவனத்தின் நலனுக்காகவும் ஒதுக்குமாறு நிறுவனத்தின் நிதித் துறைக்கு அறிவித்துள்ளது. அதன்படி, 2012 முதல் 2020 திசெம்பர் 31 வரையிலான கணக்குகளில் உரிய ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு, 2021ஆம் ஆண்டில் விவசாயக் கடன்களுக்கான வட்டி விகிதத்தை 8% ஆகக் குறைப்பதற்கு பணிப்பாளர் சபையின் ஒப்புதலைப் பெற்ற பிறகு மேற்கண்ட ஒதுக்கீடு நிறுத்தப்பட்டதுடன் 2022 ஒக்தோபர் 13 ஆந் திகதி இடம்பெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பெறப்பட்ட ஒப்புதலின்படி, அவ்வாறு ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகை நிறுவனத்தின் வருமானத்துடன் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளது. | |
| (கா) | 2020 ஆம் ஆண்டின் இறுதியில், கம்பனிக்கு சொந்தமான 469 வாகனங்கள் கம்பனியின் பெயரில் பதிவு செய்யப்படவில்லை, மேலும் அந்த வாகனங்கள் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்படுவதற்கு முன்பு இருந்த கம்பனியின் பங்குதாரர்களின் பெயர்களில் மற்றும் தனியார் நிறுவனங்களின் பெயர்களுடன் பதிவு செய்யப்பட்டிருந்தன. | இந்த 469 வாகனங்கள் அந்நிறுவனம் அரசால் கையகப்படுத்தப்படுவதற்கு முன் வாங்கப்பட்டவை அவை அப்போதைய நிறுவனத்தின் பெயரிலும், நிறுவனத்தின் உரிமையாளர்களின் பெயரிலும் வாங்கப்பட்டு, சில சட்டச் சிக்கல்கள் காரணமாக, இந்த வாகனங்களின் உரிமையை லங்கா சீனி கம்பனிக்கு சாட்டுவதற்க மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதிலும், உரித்து மாற்றப்பட்டிருக்கவில்லை. | கம்பனீக்கு சொந்தமான வாகனங்கள் கம்பனியின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கி) | செவனகல பிரிவில் பாவனையில் இருந்து நீக்கப்பட்டுள் உழவு இயந்திரங்களுக்கான ரூபா 34,718,160 பெறுமதியான 3,585 உதிரி பாகங்களை கம்பனியின் ஏனைய வாகனங்களுக்கு பயன்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ நடவடிக்கை எடுக்கப்படாது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. | பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்ட உழவு இயந்திரங்களின் 3,585 உதிரிப்பாகங்களுக்கு உரிய மேலதிக நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் சட்ட வரையறைகள் தாக்கமளித்துள்ளமை. | கம்பனியின் ஏனைய வாகனங்களுக்கு பயன்படுத்த அல்லது விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |